# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**ஆணை எண்.35/மா/2024**
**நாள் 26.03.2025**

திருமதி.S.விஜயா,
சென்னை. ........ முறையீட்டு மனுதாரர்

ஆணையர் ........ எதிர் மனுதாரர்
தாம்பரம் மாநகராட்சி,
சென்னை–45.

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–15, சைதாப்பேட்டை, Srinagar Colony, 12, Temple Avenue, Temple Tower Apartment Flat No.1A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. S.விஜயா என்பவரின் 05.07.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.07.2024 அன்று பெறப்பட்டு 35/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை–15, சைதாப்பேட்டை Srinagar Colony, 12, Temple Avenue, Temple Tower Apartment, Flat No.1A என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி. S.விஜயா என்பவர் 05.07.2024 நாளிட்ட மனுவில் கீழ்க்கண்டவாறு தனது புகாரினை தெரிவித்துள்ளார்:

"This complaint is filed on the illegal buildings that are constructed in an unapproved plot in the area of Hasthinapuram village of the Pallavaram Taluk of Chengalpattu district. It is hereby this complaint that we crave your kind attention and action to initiate action on the illegal buildings that are constructed without any plan approval – no plan approval for the building constructed – the land on which the buildings constructed are on an unapproved layout – the officials of the Town and Country Planning at Tambaram Corporation are hand in glove and intentionally impotent in execution of their powers – evasive in taking action on the abuse and infringement of the rule of law – official taking illegal gratification. The illegal construction is not stopped even after notice and repeated complaints. The officials are showing a red face towards me for all the complaints and are intentionally returning the application that are filed by me under RTI act.

2. It is here by this complaint it is informed that the buildings that are constructed in the property detailed in the schedule are said to constructed without plan approval and the land in which they are constructed are on an unapproved layout. It is to say that all the buildings that are constructed are

against the rule of law and should face action and the office has to initiate action against the illegal buildings, all the communications from the CMDA to the Commissioner to initiate action in accordance with the law as the power of the enforcement of the rule of law of the town and country planning has been delegated to the office of the Tambaram Corporation and it is the official of Tambaram Corporation who has to initiate action on the illegal structures, but all my efforts were made futile by the official of the Town and Country Planning office of the Tambaram Corporation. The officials are hand in glove with the illegal building owners to play a trick and tactic with all foul play making no response in any manner to the complaint even though they are instructed and directed by the officials of the CMDA and Housing Urban Development to initiate action on the illegal buildings, the Commissioner of the Tambaram Corporation is totally blindfolded in this matter and she will not be informed about any of the incidents that take place and she will have no knowledge of any of the activities where the TPO Mr.Sivakumar manipulates and filters all the real facts and leads the Commissioner to his whims and fancies. It is to state that almost 20 illegal building that have been issued with statutory notice for the illegal construction are yet unattended and no action in furtherance has been initiated till this day in proper, even in case of properties where order and direction to initiate action for the illegal construction have been ordered by the Hon' ble High Court of Madras the TPO does not take any proper action and has least respect on the rule of law who always make gain out of all that is available and is enriched with disrespect to the rule and implementation of the law, enriched and have amassed self-property out of all means.

Hence on the above contention, it is prayed in this complaint may be taken into enquiry and the illegal construction has to be stopped and the building that is constructed are to be sealed and demolished as the same has been constructed without plan approval and all the functioning in the building and the occupation has to be evicted by issuance of a proper notice under Town and Country Planning Act.

**<u>SCHEDULE OF THE PROPERTIES CONSISTING OF THE ILLEGAL BUILDINGS</u>**

The following buildings on the plots bearing T.S. Nos.3, 4, 5, 8, 9, 10, 11, 12, 16, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 32, 33, 34, 35, 36, 37, 38 and 39 detailed in the Block Sketch annexed below and marked in Red in Kancheepuram District, Survey No.12/4, Pallavaram Town, Ward F, Block No.34 on Rajendra Prasad Road, Hastinapuram Village, Chrompet-600 064."

3. மேற்கண்ட புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 23.07.2024 நாளிட்ட அறிவிக்கை மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

4. தாம்பரம் மாநகராட்சி ஆணையர் தனது 03.12.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி, மண்டலம் 3 அஸ்தினாபுரம் கிராமம், புல எண்.21/1, 21/2, 21/3 மற்றும் 12/4–ல் 18.20 ஏக்கர் பரப்பளவு கொண்ட மனை,தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.10647/2019–ல் தீர்ப்பு நாள் 17.03.2022–ன்படி வழக்கறிஞர் திரு.எ.செந்தில் மனோகர் மற்றும் திருமதி.விஜயா என்பவர்களால் வழங்கப்பட்ட அறிவிப்பு மற்றும் கடிதங்களின்படியும்

மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.12024/2022–ல் தீர்ப்பு நாள் 06.05.2022–ன்படி அண்ணாநகர் குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கங்களின் மனுக்களின்படி தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் உத்தரவில் மனுதாரரான திருமதி விஜயா என்பவரை விசாரணைக்கு பலமுறை ஆஜராக தெரிவித்து ஆஜராகாததாலும் அன்னாரின் மனுக்கள் மற்றும் அன்னாரின் வழக்கறிஞர் சட்ட அறிவிப்புகளை பரிசீலனை செய்யப்பட்டதில், அண்ணாநகர் அஸ்தினாபுரம் கிராம புல எண்.21/1, 21/2, 21/3 மற்றும் 12/4–ல் 18.20 ஏக்கர் பரப்பளவு இடமானது, (1) திரு.கே. வெங்கடராம அய்யர், த/பெ. கிருஷ்ண சாஸ்திரி. (2) திரு.வி. நாராயண அய்யர், த/பெ. வெங்கட பிரபு அய்யர், (3) திருமதி.வேலம்பாள் அம்மாள், க/பெ. வெங்கடராம அய்யர் ஆகியோர் திரு.சி.ஆர்.ராமசந்திரன், த/பெ.சி.ராமசாமி அய்யர் என்பவருக்கு அஸ்தினாபுரம் கிராமம் பைமாஷ் எண்கள் 238,239,240,241,242,243, 254,256, 267,268,270,273/2, 275 ஆகிய எண்களில் அடங்கிய 368 கிரவுண்டு நிலத்தினை விற்பனை செய்துள்ளதாகவும், திருமதி எஸ்.விஜயா சமர்பித்துள்ள 14.07.1972ல் தயார் செய்யப்பட்டுள்ள பட்டா எண்.292 நகலில் என்.அனந்தலட்சுமி அம்மாள் மற்றும் நீலாயதாட்சி அம்மாள் ஆகியோர் பெயரில் கீழ்க்கண்டவாறு பதிவுகள் உள்ளன.

| | சர்வே எண். | விஸ்தீரணம் |
|---|---|---|
| புல எண். | 12/4 | 3.05 |
| | 21/1 | 5.18 |
| | 21/2 | 7.88 |
| | 21/3 | 2.02 |
| மொத்தம் | | 18.13 |

திருமதி.எஸ்.விஜயா சமர்பித்துள்ள மாம்பலம் வட்டாட்சியர் அலுவலகம் ப.மு.எண்.2/27539/92 நாள் 27.08.1992–ல் வழங்கப்பட்ட வாரிசுரிமை சான்றிதழின் நகலில் திருமதி அனந்தலட்சுமி க/பெ.லேட் திரு.சி.ஆர்.ராமசந்திரன் என்பவரின் வாரிசாக செல்வி.எஸ்.விஜயா, வயது 26 வளர்ப்பு மகள், மணமானவர் என குறிப்பிட்டுள்ளதின் பேரில் மேற்கண்ட தாவா சொத்தின் மீது உரிமை உள்ளதாக திருமதி.விஜயா தெரிவித்துள்ளார். மேற்படி அண்ணாநகர் குடிசை வாழ்வோர் நலச்சங்கத்தினர் வழக்கு எண்.**W.P.No.12024/2022**-ன் வாதி அண்ணாநகர் குடிசை வாழ்வோர் நலச்சங்கம் 27.06.22–ல் விசாரணையில் கலந்து கொண்டும் 08.07.2022 மேற்படி இடம் குறித்து மனுவாகவும், ஆவண நகல்கள் சமர்ப்பிக்கப்பட்டதின்படி 1967–ம் ஆண்டு அஸ்தினாபுரம் கிராமத்தில் 18 ஏக்கர் 12 செண்ட் இடத்தில் புறம்போக்கு நிலம் என எண்ணி மக்கள் குடியேறி அண்ணாநகர் குடிசை வாழ்வோர் நல உரிமைச்சங்கம் என்ற அமைப்பினை நிறுவி செயல்பட்டு வருவதாக தெரிவித்து இந்த 18 ஏக்கர் 12 செண்ட் நிலத்தினை திரு.ராமசந்திர அய்யர் Punjab National Bank (previously Indo Commercial Bank)ல் அடமானம் வைத்து பின்னர் அடமானம் தொகையினை செலுத்த தவறியதால், அண்ணா நகர் குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கத்தினர் 1990 ஆம் ஆண்டு பூவிருந்தவல்லி நீதிமன்றத்தில் திருமதி அனந்தலட்சுமி அம்மாள் மூலம் நீதிமன்றம் சொல்லும் தொகையினை கட்டுவது என முடிவெடுத்து திருமதி அனந்தலட்சுமி அம்மாள் சங்கத்தின் தலைவருக்கு பொது அதிகாரம் வழங்கி அதன் பேரில் 102 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், திருமதி அனந்தலட்சுமி அம்மாள் 1992ல் இறந்துவிட்டதால், ஏழு ஆண்டுகளுக்கு பிறகு நீதிமன்றத்தில் பஞ்சாப் நேஷனல் வங்கி ஆஜராகாததால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என தெரிவித்துள்ளார்.

மேலும், மனுதாரர் திருமதி.விஜயா மறைந்த திருமதி.அனந்தலட்சுமி அம்மாள் அவர்களால் திருமதி. விஜயாவினை சட்டப்படி தத்து எடுக்கப்பட்டதற்கான ஆவணமோ அவரது வளர்ப்பு மகள் என்பதை திருமதி.அனந்தலட்சுமி அம்மாவால் ஒப்பு கொண்டதற்கான ஆவணங்களோ திருமதி. விஜயாவால் ஏதும் சமர்ப்பிக்கப்படவில்லை.

திருமதி.அனந்தலட்சுமி அம்மாளின் மறைவிற்கு பின்னர் செல்வி.விஜயா அவரது வளர்ப்பு மகள் என வருவாய் துறையால் வழங்கப்பட்டதற்கான வாரிசு சான்றிதழின் நகல் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டு அதன் பேரிலேயே தாவா சொத்தின் மீது உரிமை கோரப்பட்டுள்ளது. இந்த ஆவணத்தின் மனுதாரரின் பெயர் செல்வி விஜயா எனவும் மணமானவர் எனவும் முரண்பாடாக பதிவாகி உள்ளது. மேலும் இறந்தவரின் பெற்றோர் மற்றும் கணவர் முன்பே இறந்துவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி மனுதாரர் தங்களின் சொத்துரிமையை நிலைநாட்ட தவறியதனால் மேற்கண்ட அண்ணா நகர் பகுதியில் ஏற்கனவே 60 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட வீடுகளின் மீது தொடர்ந்து நடவடிக்கை எடுக்கவும், மேற்கண்ட சங்க உரிமையாளரின் வீடுகளின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971 நடவடிக்கையை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் பழைய கட்டிடங்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ள இயலவில்லை.

மேலும் அண்ணா நகர் பகுதியில் உள்ள பொதுமக்களுக்கு இடையூறு செய்யும் வண்ணம் தமிழ்நாடு ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 56 மற்றும் 57 கீழ் அறிவிப்பானது ஆணையாளர் கையெழுத்தினை Imprint எடுத்து கையொப்பமிட்டு 14 பொது மக்களுக்கு போலியான அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக திருமதி.விஜயா மற்றும் அவரது வழக்கறிஞர் இணைந்து இச்செயலில் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்ததினை தொடர்ந்து மாநகராட்சியால் காவல் ஆணையாளர் தாம்பரம் மாநகர காவல் ஆணையரகத்தில் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கடிதம் அனுப்பப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. மேலும் அண்ணாநகர் குடிசை வாழ்வோர் சமர்ப்பித்திருந்த வழக்குகளின் எதிர்வாதியான காவல்துறை தாக்கல் செய்துள்ள அறிக்கையில் திருமதி.விஜயா என்பவர் அனந்தலட்சுமி அம்மாளின் வளர்ப்பு மகள் என போலியான ஆவணங்கள் தயார் செய்து அவற்றின் அடிப்படையில் மேற்கண்ட அண்ணா நகர் பகுதி புல எண்.21/2 இல் உள்ள மனையை கிரயம் செய்ததற்காக பெறப்பட்ட புகாரின் பேரில் 15.11.2012–ல் திருமதி.எஸ்.விஜயாவினை அவரது இல்லத்தில் வைத்து காவல்துறையால் கைது செய்யப்பட்டு ஆலந்துார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மறைந்த திருமதி.அனந்தலட்சுமி அம்மாள் அவர்கள், திருமதி.விஜயாவினை சட்டப்படி தத்து எடுக்கப்பட்டதற்கான ஆவணமோ அவரது வளர்பு மகள் என்பதை திருமதி.அனந்தலட்சுமி அம்மாளால் ஒப்பு கொண்டதற்கான ஆவணங்களோ திருமதி.விஜயாவால் ஏதும் சமர்ப்பிக்கப்படாமல் திருமதி.அனந்தலட்சுமி அம்மாளின் மறைவுக்கு பின்னர் செல்வி விஜயா அவரது வளர்ப்பு மகள் என வருவாய் துறையால் வழங்கப்பட்டதற்கான வாரிசு சான்றிதழ் நகல் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டு, அந்த ஆவணத்தில் மனுதாரரின் பெயரில் செல்வி விஜயா எனவும் மணமானவர் எனவும் முரண்பாடாக பதிவாகியுள்ளது.

இந்நிலையில் மேற்கண்ட அண்ணா நகர் குடியிருப்பு பகுதியில் உள்ள 18 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சுமார் 250 குடும்பங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்களின் உரிமையாளருக்கு தமிழ்நாடு அரசு மூலம் BLR பட்டா 2003 ஆம் வருடம் வழங்கப்பட்டது. மேலும், மேற்கண்ட மனை பிரிவினை தமிழ்நாடு அரசு மூலம் கொண்டுவரப்பட்ட வரன்முறை படுத்தும் திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் PPD/LO No.1572/2019 என எண்ணிடப்பட்டு மனை பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனைப்பிரிவில் மனைகள் வரன்முறை படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், இந்நிலையில் திருமதி.விஜயா என்பவரை பலமுறை நேரில் ஆஜராக தெரிவித்து அறிவிப்பு வழங்கப்பட்டு நேரில் வராமல் திரு.செந்தில் மனோகர் வழக்கறிஞர் மட்டும் தன்னிச்சையாக பல கடிதங்களை திருமதி. விஜயா பேரில் தொடர்ந்து அனுப்பி வருகிறார்.

மனுதாரரின் மனு மற்றும் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடமிருந்து **03.12.2024** தேதியிட்டு, **04.12.2024** அன்று பெறப்பட்ட அறிக்கை மற்றும் W.P.No.10647 of 2019 மற்றும் W.P.No.12024 of 2022 and WMP No.11442 of 2022 மற்றும் W.P.No.22416 of 2023 and W M P No. 21820 of 2023 ஆகிய வழக்குகளில் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அளித்துள்ள **17.03.2022, 06.05.2022** மற்றும் **28.08.2023** நாளிட்டு முறையே அளித்த தீர்ப்புகளின் நகல்கள் தாம்பரம் மாநகராட்சியிடமிருந்து பெறப்பட்டும், **12.03.2025** தேதியிட்டு, **21.03.2025** அன்று பெறப்பட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்றத்தால் கவனமுடன் பரிசீலக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் காஞ்சிபுரம் மாவட்டம், பல்லாவரம் நகராட்சி, வார்டு F பிளாக் எண் 34 ராஜேந்திரபிரசாத் சாலையில் சர்வே எண் **12/4**ல் உள்ள குடியிருப்புகள் அனுமதியின்றி கட்டப்பட்டுள்ளது என்றும் அது குறித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கோரியுள்ளார்.

மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் W.P.No.10647 of 2019-ல் **17.03.2022** நாளிட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

"**6.**As rightly contended by R2, since the question of title as well as possession would involve a determination of facts, it is appropriate that the matter be left to R1 to take a decision after hearing the petitioner and consideration of all/any documents that she might produce in person.

7. A restricted Mandamus is issued directing R1 to hear the petitioner, consider her requests made under legal notice dated 22.07.2017 and letter dated 25.09.2017 consider the documents, if any, submitted by her and pass a speaking order in regard to her claim, within a period of eight weeks from today."

மேலும், மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் சர்வே எண்.**12/4, 21/1, 21/2** மற்றும் **21/3** தொடர்பாக அண்ணா நகர் குடிசை வாழ்வோர் நல உரிமை சங்கம் தொடர்ந்த W.P.No12024 of 2022 and W.M.P No.11442 of 2022-ல் **06.05.2022** நாளிட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

"7 Considering the above facts and circumstances of the case and having regard to the submissions made on either side, this court directs the first respondent to hear the petitioner association, while conducting enquiry as per the order dated 17.03.2022 passed by this Court in WP No.10647 of 2019. Filed by the third respondent, with regard to title as well as the possession of the property in question, complete the same on merits and in accordance with law, within a period of four weeks from the date of receipt of a copy of this order."

மேலும் மாண்பமை சென்னை உயர் நீர்மன்றம் W.P.No.22416 of 2023 and W.M.P No.21820 of 2023–ல் **28.08.2023** நாளிட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

"3. The learned counsel appearing for the 4th respondent submits that pursuant to the representation submitted by the petitioner, they have issued notice to the petitioner's association directing them to give details of the applications submitted by the members of the association and the petitioner has not given the details. If any such details are furnished the petitioner association, the application will be considered in accordance with law.

4. If members of the petitioner's association submitted an application for regularization of their plot and building, it is for them to file appropriate writ petition. The petitioner association cannot maintain an application seeking direction to respondents to

consider the applications submitted by the individual members. Accordingly, the writ petition is dismissed with liberty to the members of the petitioner association to file appropriate application. Consequently, connected miscellaneous petition is closed. No costs."

எனவே, மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக மேலே காணும் நேர்வுகளில் மனுதாரர் திருமதி.விஜயா, குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கம் ஆகியோரை தனித் தனியாக விசாரித்து முடிவெடுக்குமாறு பிரதிவாதியான தாம்பரம் மாநகராட்சியினை (முன்னர் பல்லாவரம் நகராட்சி) அறிவுறுத்தியும் சங்கத்தின் உறுப்பினர்கள் தங்கள் மனைகளை வரன்முறைப்படுத்த விண்ணப்பிக்கும் நேர்வினில், உரிய ரிட் மனு தாக்கல் செய்யலாம் எனவும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ள நிலையிலும், மேற்கண்ட பொருள் தொடர்பாக தாம்பரம் மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருவது அறிக்கையின் மூலம் அறியப்படுவதாலும், மனுதாரரின் 05.07.2024 நாளிட்ட மனு மீது இம்முறைமன்றத்தால் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்றம் ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 26 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) Mrs.Vijaya,
Flat No.1A, Temple Tower Apartment,
12, Temple Avenue, Sri nagar Colony,
Saidapet, Chennai-600 015.

2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி, தாம்பரம், சென்னை–600 045.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

4) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை–600 032
வாய்மையே வெல்லும்